# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் - 01.09.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12351/SCIC/2024**

திரு.அ.தமிழ்ராஜ் - மேல்முறையீட்டாளர்
த/பெ.அந்தோணி(எ) திருப்பதி
எண்.10/2, N.சண்முகசுந்தரபுரம்
மீனாட்சிபுரம் அஞ்சல்-626 125
ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்கா
விருதுநகர் மாவட்டம்
Phone:94438 67429.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
முதுநிலை நிர்வாக அதிகாரி
காவல்துறை தலைவர் அலுவலகம்
தென்மண்டலம், மதுரை-625 002.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **11.03.2024** |
| **2.** | **மனுதாரரின் மனு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம்** | **15.04.2024** |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 18.04.2024 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 16.09.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 11/03/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ காவல்துறை தலைமையகம், சென்னை அவர்களுக்கு அனுப்பி, அதில் "பார்வை - My Representation dated 26-09-2022 to IG Office, South Division, Madurai உள்ளிட்ட ஒன்பது - தொடர்பாக - பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட எனது புகார் மனுவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விபரங்களின் தகவல்களை வழங்க வேண்டுகிறேன்." என்பன போன்று 4 (நான்கு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (01/09/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.அ.தமிழ்ராஜ் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திருமதி.R.ராஜேஸ்வரி, முதுநிலை நிர்வாக அதிகாரி, காவல்துறை தலைவர் அலுவலகம், தென்மண்டலம், மதுரை அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 29/04/2024 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலரும், 14/06/2024 தேதியிட்டு மேல்முறையீட்டு அலுவலரும் பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அது தொடர்பான நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும், இவ்வழக்கு குறித்த, சுருக்கமான குறிப்பினையும், தற்போதைய நிலையினையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். **எனவே, பொதுத் தகவல் அலுவலர் / முதுநிலை நிர்வாக அதிகாரி, காவல்துறை தலைவர் அலுவலகம், தென்மண்டலம், மதுரை அவர்கள், மேற்சொன்ன வழக்கு குறித்த குறிப்பு மற்றும் தற்போதைய நிலை குறித்த அறிக்கையினை 15/09/2026-க்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்கண்ட உத்தரவுகளுடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12351/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
முதுநிலை நிர்வாக அதிகாரி
காவல்துறை தலைவர் அலுவலகம்
தென்மண்டலம், மதுரை-625 002.

**மேல்முறையீட்டாளர்**

திரு.அ.தமிழ்ராஜ்
த/பெ.அந்தோணி(எ) திருப்பதி
எண்.10/2, N.சண்முகசுந்தரபுரம்
மீனாட்சிபுரம் அஞ்சல்-626 125
ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்கா
விருதுநகர் மாவட்டம்
Phone:94438 67429.

RG/Sr.PC